S.A.R.M.SEYED HASSAN MOULANA,J.P.
100,'Sadaat path''
Nintavur-12
Sri Lanka

# நபி ஹிழிர் (அலை) அவர்கள்

156

# இன்னும் வாழ்கிறார்கள்

1.4.1995

ஏ. ஆர். ஏ. பிஷ்ர்–அல்–ஹாபி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நபி ஹிழிர் (அலை) அவர்கள் இன்னும் வாழ்கிறார்கள்

அனைத்துப் புகழும் எல்லாம் வல்ல அல்லாஹ் ஸுப்ஹான ஹூத்தஆலாவுக்கு. ஸலவாத்தும் ஸலாமும் எம் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கும் அவர்தம் தோழர்கள் – தொடர்ந்தவர்கள் – உறவினர்கள் – நல்லடியார்கள் அனைவருக்கும் உரித்தாகுக.

மக்களை நல்வழியில் வாழ்வதற்கான வழியை செப்பனிட்டுத்தருவது மார்க்கமாகும். அவ்வாறான செம்மையான வழியிலே கல்லையும் முள்ளையும் பரப்பிவைத்து, அப்பாவி மக்களை அவதியுறச் செய்வது சிலரது பொழுதுபோக்காகும். திருமறையையும் நபிமொழியையும் ஆராய்வது என்ற போர்வையில், இன்று அனேகர் தமது மூடத்தனத்தைப் பிரசுரங்கள் மூலம் வெளிப்படுத்தி வருகின்றனர்.

முகவரி இல்லாத ஒருசிலர் நாள் ஒரு கொள்கை; பொழுதொரு குழப்பம் எனக் காலங்கடத்துகின்றனர். இவ்வாறானவர்கள், "தாங்களே உண்மையான முஸ்லீம்கள்; தங்களைத்தவிர மற்றவர்கள் எல்லாம் வழிகெட்ட கூட்டத்தினர்" என்று 73 பிரிவினரும் கூறுகின்றனர். போதாதவிடத்து சிறு பிரசுரங்களையும் எழுதி வெளியிட்டு விடுகின்றனர்.

இவ்வகையான ஒரு பிரசுரம் சமீபத்தில் "ஹிழ்ரு நபி இன்னமும் வாழ்கிறாரா?" என்ற கேள்வியுடன் 28.2.95ல் எமது பார்வைக்குத் தரப்பட்டது. இதுபற்றிய முழுவிபரமும் அறியவேண்டி, அதனை வெளியிட்டதாகக் குறிப்பிட்டுள்ள "அகில இலங்கை சுன்னத்துவல் ஜமாஅத் பேரவை", 116 பிரதான வீதி, கல்முனை என்ற இடத்திற்குச் சென்றோம். அங்கே சென்றதும்– ஒரேயொரு நபரைக்கொண்டது அப்பேரவை என்பதை அறிந்தோம். எழுதியவரும் பரம்பரையாக வஹ்ஹாபிய – ஸியோனிஸ முகவர் என்பது தெரியவந்தது. அத்தோடு எழுதியவரின் சொந்த இயல்புகள் அடங்கிய பலபக்கங்கள் தட்டச்சு செய்யப்பட்ட ஒரு கோவையையும் சிலர் எமக்குத் தந்தனர். அனேகமான தகவல்களைப் பெற உதவிய ஈராக் நட்புறவு ஒன்றியத்தினருக்கு எம் நன்றிகள். விசேஷமாக அப்துல்காதர் (கராட்டிக்காதர்) அவர்களுக்கு மிக்க நன்றி. தனிப்பட்ட தாக்குதல்கள் நிரம்பவும் உள்ள அத்தகவல்கள், இப்பிரசுரத்திற்குச் சம்பந்தமற்றிருப்பதால் அதனை வெளியிடுவதைத் தவிர்த்தோம்.

பிரசுரத்தில் அடங்கிய விஷயங்கள் எம்மை வெகுவாகத் திகைக்க வைத்துள்ளன. ஓர் உலமாவிடம் இவ்வளவு மூடத்தனமா? வரலாற்றைத் திரித்துக் கூறுவதற்கு முயற்சியா? இது மாபெரும் மோசடி என்பதை உணர்ந்தோம். ஓர் உலமாவின் அறிவீனம் ஒரு சமுதாயத்தையே வழி கேட்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழ்த்தி விடுமல்லவா? மாரார்க்க அறிவு குறைந்தவர்கள் வழிதவறிவிட மாட்டார்களா?

"பார்வையுடையோனுக்குக் குருடன் எவ்வாறு சமமாகானோ. (35:19) அவ்வாறே அறிந்தோனுக்கு அறியாதவன் சமமாகான்" (39:9) எனத் திருமறை கூறுகிறது. மூடத்தனம், பிரசுரமூலம் பிரபல்யப்படுத்தக்கூடிய சிறப்பான ஒரு அம்சம் அல்லவே ! எனவே - எவ்வாறாவது இதனை எழுதிய உலமாவுக்கு அவர் விட்ட பிழையை விளங்க வைக்க எண்ணினோம். இப்பிரசுரத்தை விற்பனை செய்ய ஒரு வாத்துக் கூட்டம். மூடத்தனத்தையே விற்பனை செய்கின்றோம் என்பது கூட விளங்காத ஒரு கோமாளிக் கும்பல். அதை வாசித்த சில செம்மறிகள், "ஆஹா ஹிழிர் நபி மவுத்தாகி விட்டார். இதோ ஆதாரம்" என்று கூடக் குரல் எழுப்பி கூட்டம் சேர்க்கத் துவங்கிவிட்ட பயங்கரம்.

இவர்கள் அனைவருக்கும் ஒரு பதிலாக இதைத் தருகிறோம். எமது ஆதாரங்களை முடியுமானால் பிரசுரத்தை எழுதிய குருக்களோ அல்லது சகல வஹ்ஹாபிய குருக்களுமோ பிழையென நிரூபிப்பார்களா?

எமது பிரசுரத்தின் நோக்கம். இக்கூட்டத்தினருக்கு உண்மையை உணரவைப்பதல்ல. ஒருபோதும் இவர்கள் உணரவும் மாட்டார்கள். அவர்கள் நண்பகலில் வெளியாகிய வெளவால்கள். அறிவுள்ள காலம்வரை அவர்களால் இவை ஒப்புக் கொள்ளப்படமாட்டா.

ஆனால் இஸ்லாத்தை மார்க்கமாகக் கொண்டவர்கள் அனேகர் இன்றும் இருக்கிறார்கள். அவர்களை இத்தகவல்கள் சென்றடைய வேண்டும். நபி ஹிழிர் (அலை) அவர்கள்பற்றிய அனேக வரலாற்று உண்மைகளை அவர்கள் அறிய வேண்டும். அவர்கள் பிரார்த்தனை செய்யும்போது நபி ஹிழிர் (அலை) அவர்களின் பொருட்டால் தங்கள் பிரார்த்தனையை அங்கீகரிக்குமாறு; அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்கின்ற; படைப்பினங்களின் எத்தேவையும் அற்ற வல்ல நாயனிடம் கேட்டுப் பெற வேண்டும், என்ற எண்ணத்தால் இதனைப் பிரசுரம் செய்கின்றோம்.

சுருக்கமான சொல்லாட்சி; அழுத்தமான பொருட்செறிவு; இறுக்கமான வசன அமைப்பு - இவ்வாறான அம்சங்களுடன் எழுத எமக்கு நாட்டமிருந்தது. அனைத்துத் தரத்தாரையும் கருத்திற் கொண்டதால், மிக மென்மையாக எழுத வேண்டியதாயிற்று. உண்மையைத் தேடுகிறவர்களும், உண்மையை அறியப்பாடுபடுகிறவர்களும் இதனை ஒரு ஆதார பூர்வ ஏடாகக் கொள்ளலாம். தனக்குத் தெரிந்ததை எதிரிக்கு மறைப்பதும் குற்றம்; உண்மையை மறைக்கும் உரிமை யாருக்குமே இல்லை என நாம் போதிக்கப்பட்டுள்ளோம்.

"அறிவு" ஒரு மனிதனின் சிறப்பைப் பலமடங்கு உயர்த்துகிறது" என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபிமொழி நம் அனைவருக்கும் கூறப்பட்டதே. திருத்தூதர்களிடமிருந்து மனித சமுதாயத்திற்குக் கிடைத்த மார்க்க அறிவு மிக்கப் பாராட்டுகளுக்கு உரியது. சிலர், தாம் பெற்றிருக்கும் அறிவை, மார்க்க அறிவு என்று தப்புக்கணக்குப் போடுகின்றனர். என்னென்னவெல்லாமோ மார்க்க ஞானம் என எண்ணுகின்றனர். தனக்குத் தெரியாத ஒன்றைத் தெரிந்திருப்பதாகக் காட்டிக் கொள்வது மிகத்தவறு. எதிரிகளின் மூலம் வெளிப்படும் உண்மையை ஏற்றுக்கொள்ளும் மனோபக்குவம் இதைவாசிக்கும் அனைவருக்கும் தேவை. பாராட்டுக்காகச் செய்யப்படும் அனைத்துக் காரியங்களும் துர்நாற்றம் வீசாமல் விடாது என்பதையும் நாம் அறிவோம். முரணான நோக்கத்தை மனதிற் கொண்டு விடயத்தை அணுகினால், நிச்சயமாக உண்மை புரியாது. ஏனென்றால் கண்ணாலும் காதாலும் அறிய முடியாத அனேக சக்திகளை எல்லாம், நம் முன்னோர்கள் ஞானோதயத்தின் உதவியினால் தெளிவாக உணர்த்தியிருக்கிறார்கள். ஆத்மீக ஞான சுவையற்றவர்களும் உள்ளுணர்வு ஞானத்தைப் பெற்றுக்கொள்ளாதவர்களும் இவ்வித ஞானங்கள் நிறைந்திருப்போரைக் கிண்டல் செய்வதும் தூஷிப்பதும், குறைகூறுவதும் புதுமையல்ல.

இதனை எழுதத் தேவையான தகவல்கள் எம்மிடம் நிரம்ப இருந்தன. கண்ணியமிக்க அனேக உலமா அவற்றைத் திரட்டித்தந்தார்கள் காத்தான்குடி மர்ஹூம் மௌலவி எம். ஏ. ஹாமிது லெவ்வை ஆலிம் அவர்களின் உதவியால் உருவாகிய " இஷாஅத்துல் அதற் ரீஹையாத்து நபியில்ஹிழிற் " என்ற நூல் மிகவும் உதவியது. என்றும் எம் மதிப்பிக்குரிய அவர்களுக்கு நபி ஹிழிர் (அலை) அவர்கள் பொருட்டால் இறைவன் நல்லருள் பாலிப்பானாக!

நபி ஹிழிர் (அலை) அவர்களின் வரலாறு பற்றி எழுதக் கூடிய எந்தத் தகைமையும் எம்மிடம் இல்லை. இதனை நன்றாக நாம் அறிவோம். ஆனால் வெளியிடப்பட்ட "ஹிழிரு நபி இன்னமும் வாழ்கிறாரா?" என்ற பிரசுரத்திற்கு மறுப்பு ஒன்றையும் அதற்கான விளக்கங்களையும் அல்லாஹ் உதவியால் எழுதக் கூடிய எல்லாத்தகைமைகளும் எம்மிடம் உள்ளன. "போதிய ஞானமில்லாமல், விவகாரத்தை நன்கு தெரிந்து கொள்ளாமல் ஒருவன் ஒரு விடயத்தை வாதாடினால் அவன்மீது இறைவனின் வெறுப்பு எப்போதும் இருக்கும்" என்ற நபிமொழியை நினைவுபடுத்திக் கொண்டு இதனை நாம் எழுத முன்வந்தோம்.

உண்மைகள் மறைக்கப்படுகின்ற காலம் இது. பணப் பலத்தோடு ஸ்தாபன ரீதியாகத் திட்டமிடப்பட்ட பிரச்சார ஊடகங்களிடையே நாம் போட்டியிட வேண்டியுள்ளது. எந்த ஒரு மார்க்கக் குழப்பத்திற்கும் பின்னணியில் "உலமா" என்ற லேபலோடு வருபவர்கள் முக்கிய பங்கெடுக்கின்றனர். வாசகர்கள் ஒரு உண்மையை விளங்க வேண்டியது அவசியமாகும். இனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழப்பங்கள் தீரப் போவதில்லை. மிகவும் அதிகரிக்க வேண்டியுள்ளன. இமாம் மஹ்தி (அலை) அவர்கள் நபி ஈஸா (அலை) அவர்கள் வரவேண்டிய காலம் சில கையடக்கமான வருடங்களுக்குள்ளேயே வந்துவிட்டது. வரவிருக்கும் நபி ஈஸா (அலை) அவர்கள் ஒரு மாபெரும் விஞ்ஞானியாக அனைத்து விஞ்ஞானிகளையும் மிகைக்கக் கூடியவர்களாகவே வருவார்கள். இதற்கு முன்பும் காலத்தின் தலைவர்கள் அவ்வக்காலங்களில் உள்ள கலைகளிலே சிறந்தவர்களாகவே வந்துள்ளனர். எனவே அவற்றைப் புரிந்து கொள்ளக் கூடிய அளவு எமது அறிவை மேம்படுத்துவோமாக.

நம் அனைவருக்கும் அல்லாஹ் போதுமானவன்
நன்றி

358. பெரியபள்ளி வீதி,
அக்கரைப்பற்று - 04.
1995 - 04 - 01

*ஏ.ஆர்.ஏ.பிஷ்ர் - அல் - ஹாபி*

## -பிரார்த்தனை-

இப்பிரசுரம் வெளியாவதற்குத் தேவையான சகல உதவிகளையும் வழங்கிய ஜானப் தாவூஸ் இப்னு முஹம்மது மஹ்றூப், ஸுலைமான் இப்னு தாவூஸ், ஸுஹைப் இப்னு தாவூஸ், ஆகியோருக்கு "இறைவா! உன் ஞானத்தையும் - அருளையும் நல்குவாயாக. இவர்களின் இதயங்களை அறிவாலும் ஞானத்தாலும் ஒளி பெறச்செய்வாயாக!"

-ஆமீன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நபி ஹிழிர் (அலை) அவர்கள் இன்னும் வாழ்கிறார்கள்

நபி ஹிழிர் (அலை) அவர்கள் பற்றிய வரலாறு மிகவும் தொன்மையானது. நீண்டு பரந்தது. சுமார் நாலாயிரத்து ஐந்நூறு வருட சரித்திரப் பின்னணியைக் கொண்டது. பல்லாயிரக்கணக்கான இறைநேசர்களோடு தொடர்புகள் பல பெற்றது. இவ்வாறான வரலாற்று நாயகனின் செய்திகள் - பண்புகள் - குணநலன்கள் - தகுதிகள் போன்றவற்றையும், அவர்கள் நிகழ்த்திய அற்புதங்களையும் ஒரு சில பக்கங்களில் எழுதிவிட முடியுமா? நூற்றுக் கணக்கான பக்கங்களில் எழுதி விட்டாலும் நிறைவுறுமா?

நபி ஹிழிர் (அலை) அவர்கள்பற்றி எந்த உண்மையும் தெரிந்து கொள்ளாமல் - புரிந்து கொள்ளாமல் பிறந்தார் - வாழ்ந்தார் - இறந்தார் என்று எழுதி முடித்துவிட, அவர் என்ன ஒரு ஐந்தாந்தரப் பிரஜையா? மேலே கூறிய எந்தப் பின்னணியும் இல்லாது, முன்னுக்குப் பின் முரணானதும், கருத்துத் தெளிவற்றதும், குழப்பங்கள் நிறைந்ததுமான ஒரு பிரசுரந்தான் "ஹிழிர் நபி இன்னமும் வாழ்கிறாரா" என்பது. அநுபவமற்ற சிறு பிள்ளைத் தனமான ஒரு முயற்சியே அது. வேதாளக் கதைப்பாணியில் எழுதப்பட்டிருந்தது விமரிசனத் தகுதியை இழந்துவிட்ட ஒரு சிறு பிரசுரமானாலும், கருப்பொருள் மிக்கவும் பரந்ததும் - ஆழமானதும் என்பதால், சிலருக்குப் போதிய ஆதாரங்கள் தேவையாயிருந்தன. ஆதாரங்களைப் பெற்றுக்கொள்ளப் போதிய தமிழ் நூல்களும் இன்று கிடைப்பது அரிது. நபி ஹிழிர் (அலை) அவர்கள் அற்புதக் களஞ்சியமல்லவா? தனக்கு எதிரான ஒரு பிரசுரத்தின் மூலமாகத் தன்னை நினைவுபடுத்தி தற்காலத்தில் தன்னைப்பற்றிய தகவல்களைப் பகிரங்கப்படுத்த ஒரு மறுப்பையும் வெளியிட எமக்கு ஊக்கமளித்தார் என்று நாம் நம்புவதால்:, விடயங்களையும் சற்று விரிவாக ஆராய்வோம்.

மேலே காட்டிய பிரசுரம் 14 பக்கங்களைக் கொண்டது. அதில் 6 கேள்விகளும் பதில்களும் இருக்கின்றன. எந்தப் பதிலும் பொருத்தமானதாக இல்லை. எழுதியவரே தமது கருத்துக்களில் முரண்பட்டிருக்கிறார். எதையாவது எழுதி நையாண்டி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு கேள்விகளும் பதில்களும் தந்துள்ளார்.

நாமும் கேள்விகள் - அவரது பதில்கள் - எமது பதில்கள் என்றவாறு எமது விளக்கத்தைத் தருகிறோம். இதனை ஆத்திரத்தோடு படிக்காதீர்கள். இதிலுள்ள நிறைவுகளைப் புரியமாட்டீர்கள். அனுதாபத்தோடு பார்க்காதீர்கள். இதிலிலுள்ள குறைகள் தெரியாது போய்விடும். முடிந்தால் நடுநிலைமையோடு படியுங்கள். உண்மையை இளம் சமுதாயத்திற்கு எடுத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுங்கள். சிந்தனைச் செல்வம் மிக்க ஒரேயொருவருக்காகவே இப்பட்டி மன்ற விவாதம் தரப்படுகிறது. அந்த ஒருவராக நீங்கள் ஏன் இருக்க கூடாது? தொடர்ந்து படியுங்கள்.

## பிரசுரத்திலுள்ள கேள்விகள்

1. ஹிழிர் என்பவர் யார்? அவரது பெயர் என்ன?
2. ஹிழிர் நபிக்கு உறவு வழி எது?
3. ஹிழிர் ஒரு நபியா?
4. ஹிழிர் நபி + மூஸா நபி = யார் சிறந்தவர்?
5. ஹிழிர் நபி மரணித்து விட்டாரா?
6. அய்னுல் ஹயாத்

இக்கேள்விகளும் அவற்றின் கீழ் நையாண்டியான உத்தியில் வக்கிரமான நிந்தனைகளும், கல்மிஷமான விடைகளும் முரண்கருத்துகளும் மேற்படி பிரசுரத்தில் காணப்படுகின்றன.

கேள்வி 1. ஹிழிர் என்பவர் யார்? அவரது பெயர் என்ன?

பிரசுரத்தில் உள்ள விடையின் சுருக்கம்:- ஹிழிர் என்று ஒருவர் இஸ்லாமிய வரலாற்றில் வாழ்ந்திருக்கிறார். குர்ஆனில் அவரின் வரலாறு அழகாக இடம் பெற்றுள்ளது. இதன் பின்னணி ஹதீதில் உண்டு. ஆபத்தில் உதவுவார் என்ற தவறான ஐதீகம் பாமர மக்களிடையே உண்டு. அவர் பெயரில் பாத்திஹா - மௌலிது ஓதி வயிற்றைக் கழுவுவோர் உண்டு. அவர் பெயரில் பொங்கலும் இடம் பெறும்.

எமது பதில்:-

இது ஏற்புடைய ஒரு பதிலல்ல. ஒரு சிந்தனையற்ற பதிலாகும். திருமறையில் ஸூறத்துல் கஹ்பு அத்தியாயத்திலே நபி ஹிழிர் (அலை) அவர்கள் பற்றிய உரையாடல் மிக அழகாக இடம் பெற்றிருப்பதால், நிச்சயமாக அவர் ஒரு கீர்த்தி மிக்கவராகவே இருப்பார். ஹதீஸ்களில் போதிய விளக்கம் தந்திருப்பதால் நிச்சயமாகப் பெயரும் குறிப்பிடப்பட்டிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குழந்தை பிறந்தால் அதற்குப் பெயர் வைக்க வேண்டியது பெற்றாரின் கடமையாகும். ஆதிமனிதன் முதல், நடைமுறையில் உள்ள ஒரு பழக்கமிது. சாதாரணப் பிரஜையே தம் குழந்தைகளுக்குப் பெயர் வைக்கும்போது, ஒரு அரச தம்பதிகள் தங்களின் ஒரேயொரு செல்வப் புதல்வனுக்குப் பெயரிடாமல் இருப்பார்களா? சக்கரவர்த்தித் தம்பதிகளான தாயின் சகோதரியும் அவர்தம் கணவரும் தங்களின் உடன் பிறந்தாளின் (சக்கரவர்த்தியின் மைத்துனியின்) பிள்ளைக்குப் பெயரிடாது இருப்பார்களா? நபி ஹிழிர் அவர்களின் பெரிய தந்தை ஒரு சக்கரவர்த்தி மட்டுமல்லவே. பாராண்ட மன்னன் ஸ்கந்தர் துல்கர்னைன் என்பவரின் தந்தையுமல்லவா? விண்வெளி ஞானத்தில் மிகச் சிறந்த விஞ்ஞானியாய்த் திகழ்ந்தவரல்லவா? இப்பரம்பரையைப் பெற்ற நபி ஹிழிர் (அலை) அவர்களுக்கா பெயரிடாமல் இருப்பார்கள்? சொற்பமான சிந்தனையுள்ளவர்களுக்கே இது பாரதூரமான தப்பான கேள்வி என்பது புரியுமே.

திருமறையிலே இறைவன் இவரைப் பாராட்டி நபி மொழியிலே சிறப்பித்துத் கூறப்படும் போது - அவ்வாறு யாரைக் குறிப்பிட்டுக் கூறப்படுகிறது என்பது கூடப் புரியவில்லையா? அங்கு பெயர் பிரஸ்தாபிக்கவில்லையா? "**பிதாயா வன்னிஹாயா**" என்ற நூலிலே பல பெயர்களால் ஹிழிர் நபி அழைக்கப்படுகிறார் எனக் கூறிவிட்டு, நூலின் பாகம் - 1 - பக்கம் 326 எனவும் குறித்து எழுதிவிட்டு இவரின் பெயரே தெரியாது; அல்லாஹ்வே அறிவான் என முடித்திருக்கிறாரே... இது வாசகர்களுக்காவது பொருத்தமான விடையாகப் படுகிறதா? திருமறையை, நபிமொழியை, சட்டத்துறை இமாம்களை ஏற்காவிட்டால், பிரசுரித்தவர் யாரின் கூற்றை ஏற்கப் போகிறார்? நஜ்து ஷைத்தானின் நூல்களில் இதற்கான ஆதாரங்கள் இல்லை என்ற ஆதங்கமா? வாசகர்களுக்காக மேலும் பல ஆதாரங்களை நாம் தருகிறோம்.

"காய்ந்துபோன ஒரு புற்றரையில் நபி ஹிழிர் (அலை) அவர்கள் அமர நேர்ந்தால் அத்தரை பசுமை பெற்றுவிடும். இதனால் அவர்கள் ஹிழிர் (அலை) என்று அழைக்கப்படுகிறார்கள். அவர்களின் "**குன்யத்**" பெயர் அபுல் அப்பாஸ். இறுதிநாள் வரையில் அவர்கள் ஹயாத்தாக இருக்கிறார்கள். உலக மக்களால் "ஹயாத்துந்நபி" என்றழைக்கப்படுகின்றார்". - ஹதீஸ்.

| | | | | |
|---|---|---|---|---|
| **ஆதாரம்:-** | புஹாரி | 2ம் | பாகம் 153ம் | பக்கம் |
| | திர்மதி | 2ம் | பாகம் 144ம் | பக்கம் |
| | சிறாஜுல் முனீர் | 2ம் | பாகம் 490ம் | பக்கம் |
| | தாரிகுல் கமீஸ் | 1ம் | பாகம் 120ம் | பக்கம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபி ஹிழிர் (அலை) அவர்கள் நபி நூஹ் (அலை) அவர்களின் ஆறாவது தலைமுறை பேரனான மல்கான் என்பவரின் மகன். அவரது குடும்பப் பெயர் "அபுல்அப்பாஸ்" ஆதாரம்:- கிதாபுத் தஃரிப் வல் இஸ்லாம்.

பல சிறப்புக்களைப் பெற்றவர்கள் அவர்கள். அச்சிறப்புக்களின் காரணத்தால் அநேக காரணப் பெயர்களால் அழைக்கப்படுகின்றவர்கள். இறைவன் பல ஆயிரக்கணக்கான பெயர்களாலும், நபி பெருமானார் (ஸல்) அவர்கள் நூற்றுக்கு மேற்பட்ட பெயர்களாலும் அழைக்கப்படுவது புதுமையல்ல. கௌதுல்அஃலம் முஹ்யித்தீன் அப்துல்காதர் ஜீலானி (ரஹ்) அவர்கள், ஸெய்யிதுனா ஸுல்தானு ர் ஆரிபீன் ஸையித் அஹ்மத் கபீர் ரிபாயி (ரஹ்) அவர்கள், குத்புல் அக்தாப் மீரான் ஸையித் அப்துல்காதிர் ஷாஹுல்ஹமீது பாதுஷா (ரஹ்) அவர்கள் போன்ற மகான்கள் 15க்கும் அதிகமான காரணப்பெயர்களால் அழைக்கப்படுகின்றனர்.

இது இஸ்லாமிய வரலாற்றில் மட்டுமல்ல, உலக மக்கள் அனைவராலும் கையாளப்பட்டுவரும் நடைமுறை. காரணப்பெயர்கள் உள்ளவர்களுக்கு இயற் பெயர் இல்லாது போகுமா? நபி ஹிழிர் (அலை) அவர்களுக்கு பெற்றார் இட்ட பெயர் "பல்யா" என்பதாகும். எனவே நபி ஹிழிர் (அலை) அவர்களின் பெயர் தெரியாது என்று கூறுவது மிக்க அபத்தமானதே!

தொடர்ந்து பிரசுரத்தில், "அவர் பெயரில் பாத்திஹா - மௌலிது ஓதி வயிற்றைக் கழுவுவோரும் உண்டு, அவர் பெயரில் பொங்கலும் இடம் பெறும்" என்றும் குறிப்பிட்டுள்ளது.

இன்றைக்கு இலங்கையிலே சுமார் 3000 பள்ளிவாசல்களும் அதேஅளவு குர்ஆன் மத்ரசாக்களும் உள்ளன. இவற்றில் சுமார் 5000 பேர் குர்ஆனை ஓதியதனாலேதான் ஜீவிதம் நடத்துகின்றனர். வஹ்ஹாபிய - ஸியோனிஸ முகவர்கள் சுமார் 500 பேர் உளர். இவர்கள் கூட திருமறையை ஓதியதாலும் அதனைப் பிரயோகிப்பதாலுமே தங்களது சீவியத்தை நடத்துகின்றனர். இவ்வாறு திருமறையின் உதவியுடன் ஊதியம் பெறுவதை"ஷரிஅத்" அனுமதித்துள்ளது. பாத்திஹாவைத் தினமும் 17 முறைகளுக்கும் அதிகமாக ஓதி தொழுகை நடத்துகிறார்கள். இதற்காக அவர்கள் ஊதியம் பெறுகிறார்கள். இது மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டதே. திருமறைக்குத் தவறான விளக்கம் தரும் ஸியோனிஸ முகவர்களை விட- எமது உலமாக்கள் எவ்வளவோ ஏற்றமானவர்கள். பாத்திஹா ஓதுவதில் அவர்கள் எப்போதுமே வரம்பு மீறியவர்களல்லர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினமும் கடமையான தொழுகை மட்டுமல்ல, அனைத்து அமல்களும் பாத்திஹா ஓதுவதன் மூலமும், இஸ்லாமிய மார்க்கம் பரவிய காலத்தில் நடைபெற்ற வீரதீர செயல்களையும், காவியங்களையும் - சில காவியத் தலைவர்களின் தீரம் மிக்க செயல்களையும் பாடல்களாகப் பாடி, அதன் மூலமும் சன்மார்க்கப்பணி செய்து வருகின்றனர். திருமறைக்கு நாம் கொடுக்கும் மகத்துவம் மிக்க மதிப்பினையும், பெருமானார் (ஸல்) அவர்களைக் கண்ணியப்படுத்துவதையும் கருத்திற் கொண்டு, ஷரிஅத்துக்கு விரோதம் வந்துவிடக்கூடாது என்ற பேணுதலுக்காகவும், ஈமானில் ஷிர்க்கு நுழைந்து விடக்கூடாது என்ற முன் எச்சரிக்கையுடனும் இதனைக் கற்றறிந்த ஒருவர் மூலம் திருமறையை ஓதுவதை அல்லது பிரார்த்தனை புரிவதைப் பாமரர்கள் பன்னெடுங் காலமாய்ச் செய்து வருகின்றனர். அதற்காக அந்த மார்க்க அறிஞர் கெளரவிக்கப்படுகிறார். ஒரு மார்க்க அறிஞருக்கு அறுசுவை உண்டி கொடுத்து உபசரிப்பது, குருக்களுக்கு ஏன் பொறுத்துக் கொள்ள முடியாமல் இருக்கிறது?

மார்க்கத்தையும் - நபிமார்களையும் - வலிமார்களையும் மதிப்பிற்குரிய இமாம்களையும் அவதூறாக எழுதி, அதன் மூலம் வயிறு கழுவுவது மட்டுந்தான் சிறந்ததா? அவர்களுக்கு மட்டுமே பொங்கல்களும் நைவேத்தியங்களும் உரியன எனக் குருக்கள் அவர்கள் கருதுகிறார்களா? எல்லா வற்றிற்கும் இவர்களுக்கு ஆதாரம் தேவையாம். அதுவும் திருமறையிலும் நபி மொழியிலும் மட்டுமே ஆதாரம் தேவையாம். அதே திருமறையிலும் நபி மொழியிலும் கூறப்பட்ட ஆதாரங்களையே அலட்சியம் செய்து விட்டு, தனது வக்கிர சிந்தனைக்கு மட்டும் சரியாகத் தெரிவதுதான் உண்மையா? எந்தவிதமான ஆதாரமுமற்ற - தாயின் ஒரு சொல்லை நம்பித்தான் தகப்பனை அடையாளங் காண்கிறோம். மனைவியின் ஆதாரமற்ற ஒரு சொல்லை நம்பித்தான் நமது குழந்தைகளென உரிமை பாராட்டுகிறோம். மிக்கப் பலவீனமான தன்மைகளின் மொத்த உருவமான மனிதன், சகல வல்லமைகளையும் உடைய இறைவனின் வசனங்களுடனும், அதனைப் போதிக்க வந்த நபிமார்களின் வாக்கியங்களுடனும், நூறு வீதமும் இவ்விரண்டையும் பின்பற்றி இறைநெருக்கத்தைப் பெற்ற நல்லடியார் களுடனும் மோதி விளையாடுகிறான். அவிவேகமும், நனிபேதைமையும் பகிரங்கப் படுத்தக்கூடிய ஒரு சிறப்பு அம்சம் என்று குருக்கள் நினைக்கிறார்களா?

நபி ஹிழிர் (அலை) அவர்கள் யார்? அவரது பெயர் என்ன? என்ற வினாக்களுக்குத் தெளிவான விடைகளைப் பெற்றிருப்பீர்கள் என்ற எண்ணத்தில் பிரசுரத்தின் இரண்டாவது வினாவிற்கு எமது பதிலைப் பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி - 2 ஹிழிரு நபியின் உறவு வழி?

பிரசுரித்தவரின் பதிலின் சுருக்கம்:- இதில் பலத்த வேறுபாடுகளை நாம் நூல்களிலே காணலாம். ஆதமுடைய மகன் என்பதாக இப்னு அப்பாஸ் நபி அவர்கள் கூறியதாக ஓர் அறிவிப்பு உண்டு. இந்த அறிவிப்பின் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளதாக இமாம் இப்னு கதீர் குறிப்பிட்டுள்ளார். எனவே இவ்வறிவிப்பு ஏற்புடையதல்ல. இன்னும் பல அறிஞர்கள் கருத்துத் தெரிவித்து ஏற்க முடியாது என்கின்றனர்.

இவரின் உறவுவழிபற்றி குர்ஆனும் நபி மொழியும் நமக்கு அறிவிக்கவில்லை: இவர் ஒரு நல்ல அடியாரே தவிர, வேறெந்த விசேஷமும் இல்லை: குர்ஆன், நபி மொழியில் வந்தது தவிர, ஏனையவை வெறும் கற்பனைகளும், மனித யூகங்களும்தான், மறைவான விஷயங்களில் குர்ஆன் நபிமொழி வராததை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் ஒரு முஸ்லிமுக்கு இல்லை.

எமது பதில்-

நபிஹிழிர் (அலை) அவர்களின் உறவு வழி. அல்லாஹ் திருமறையிலே தனது அடியாரில் ஒருவர் என்றும் தனது அருளைக்கொடுத்து ஞானத்தையும் கற்பித்து இருந்தோம் (18:65) என்றும் புகழ்ந்து கூறுகிறான். இறைவனால் புகழ்ந்து கூறப்பட்ட ஒருவர், ஓர் அநாமதேயமானவராய் இருப்பாரா? இன்னும் ஸஹீஹான ஹதீஸ்களிலும் நபி ஹிழிர் (அலை) அவர்களைப்பற்றி "ஸில் ஸிலா"" என்னும் வம்சவழிமுறை கூறப்பட்டுள்ளது. ஒரு நபிக்கு அவரது பரம்பரை விபரம் தெரியாது போகுமா?

நபி ஹிழிர் (அலை) அவர்கள் வம்சவழிமுறை ஆதாரபூர்வமாக கீழே தரப்பட்டவாறு அமைந்துள்ளது. நபி ஹிழிர் (அலை) பல்யா அவர்கள்

| | | |
|---|---|---|
| மல்கானின் | மகன் | ஆவார் |
| மல்கான் | அவர்கள் | பாலியின் மகன் |
| பாலி | அவர்கள் | ஆபிறின் மகன் |
| ஆபிற் | அவர்கள் | ஷாலிக்கின் மகன் |
| ஷாலிக் | அவர்கள் | அல் பக்ஷத்தின் மகன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல் பக்ஷத் அவர்கள் ஸாமின் மகன்

ஸாம் அவர்கள் நபி நூஹ் (அலை) அவர்களின் மகன்.

| | |
|---|---|
| ஆதாரம் :- தாரிகுல் கமீஸ் | 1ம் பாகம் 120ம் பக்கம் |
| ஹயாத்துல் ஹய்வானில் குப்ரா | 1ம் பாகம் 235ம் பக்கம் |
| புதூஹாத்துல் மக்கீய்யா | 3ம் பாகம் 336ம் பக்கம் |
| ஹாஷியத்துல் பாஜுரி அலப்னிகாசிம் | 1ம் பாகம் 17ம் பக்கம் |

1ம் கேள்வியில் உள்ள ஆதார நூல்களில் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே நபி ஹிழிர் (அலை) அவர்கள் தெளிவான வம்ச பரம்பரையை உடையவர்கள் என்பது தெளிவாக உள்ளது.

**கேள்வி 3 :- ஹிழ்ரு ஒரு நபியா?**

**பிரசுரித்தவரின் பதிலின் சுருக்கம்:-** அவர் ஒரு நபி என குர்ஆன் ஹதீஸ்களில் ஆதாரம் உண்டு. அனேக இமாம்களின் கூற்றுப்படி அவர் ஒரு நபி தான்.

**எமது பதில்:-**

14ம் பக்க பிரசுரத்தில் பல இடங்களில் நபி ஹிழிர் (அலை) அவர்களைப் பற்றி பிழையான கண்ணோட்டத்தில் எழுதப்பட்டிருந்தது. முஸ்லிம் சமூகத்தின் மனித யூகங்களால் ஏற்பட்ட கருத்துக்கள் என்றும் கற்பனைக்கதைகள் போன்றதுதான்., ஹிழ்ரு நபி பற்றியதாகும் என்றும் எழுதிவிட்டு, 6முதல் 9ம் பக்கம் வரை ஹிழிர் ஒரு நபிதான்; குர்ஆனும் ஹதீதும் ஆதாரம் தருகின்றன, என்றும் மிக உயர்வாகவும் ஏற்றிப்போற்றி எழுதி இருக்கிறார். பிரசுரித்தின் 90 சதவீதமான பகுதிகளில் நையாண்டிப்பாணியிலே எழுதிவிட்டு இப்பகுதி மாத்திரம் உண்மை வெளிப்பட எழுதுவது போன்ற ஒரு பிரமையை ஏற்படுத்தியிருக்கிறார்.

இந்தத் தடுமாற்றங்கள் ஏன் ஏற்படுகின்றன? எவராவது தனது தகுதிக்கு மீறிய விடயங்களில் தலையிடுவதால், இது போன்ற சித்தத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவற்ற பதில்களே வெளிவரும். அது புதுமையல்ல. திருமறையின் 40 : 78ம் வசனம் சில நபி மார்களின் வரலாற்றை இறைவன் பெருமானார் (ஸல்) அவர்களுக்குக் கூறிய தாயும், சிலரின் வரலாற்றை கூறவில்லை என்றும் குறிப்பிடுகின்றது. நபி ஹிழிர் (அலை) அவர்களின் வரலாறு மூடிமறைக்க முடியாத தெளிவான அத்தாட்சியுடன் இருப்பதால் ஏற்றுக்கொண்டு இருப்பது வெளிப்படையானது.

நபி ஹிழிர் (அலை) அவர்களை நபி என ஏற்றுக்கொண்டாலும் குருக்களின் மனதிலே அவரைப்பற்றிய அருவருப்பான எண்ணங்கள் இழையோடி இருப்பதை பிரசுரம் முழுவதும் காணக்கூடியதாக இருக்கின்றது. நபிமார்களை சங்கைசெய்து கண்ணியப்படுத்தி அவர்களில் உவப்புவைப்பது ஈமானின் ஷர்த்துக்களில் நின்றும் உள்ளது. பிரசுரத்தின் 14 பக்கத்தில் ஓர் இடத்திலாவது நபிமாாக்ளுக்குத் தரப்படும் கண்ணியமிக்க வார்த்தையான அலை ஹிஸ்ஸலாத்துவஸ்ஸலாம் (அலை) என்ற சொல் குறிப்பிடப்படவில்லை. இதன் மூலம் தனது மனத்தில் நபி ஹிழிர் (அலை) அவர்கள் பற்றிய கண்ணியக் குறைவையும் வெறுப்புணர்வையும் காட்டுகிறார். குருப்பட்டம் பெற்ற ஒரு குருவானவர் இப்படிநடப்பது மனவேதனைக்குரியது. குருக்களின் தந்தையும் ஒரு குருவானவர். நபி ஹிழிர் (அலை) அவர்களின் பெயரால் அனேகமான பொங்கல்களை உண்டவர். அந்த நன்றியாவது தனக்கு இருக்ககூடாதா? உலகிலே தோன்றிய 124 ஆயிரம் தீர்க்கதரிசிகளில் 313 தூதுவர்கள் அடங்குவார்கள். அவ்வாறானவர்களில் நபி ஹிழிர் (அலை) அவர்களும் ஒருவர் என்ற நிலையில் நாம் நிலைத்திருக்கிறோம்.

| | | | | |
|---|---|---|---|---|
| ஆதாரம்:- | தப்ஸீர் பைளாவி | 1ம் பாகம் | 484ம் | பக்கம் |
| | தப்ஸீர் ஜலாலைன் | 2ம் பாகம் | 6ம் | பக்கம் |
| | தப்ஸீர் றூஹுஸ்பயான் | 2ம் பாகம் | 497ம் | பக்கம் |
| | தப்ஸீர் தாஜுல் மிரங்கனி | 2ம் பாகம் | 255ம் | பக்கம் |
| | தப்ஸீர் ஸாவி | 3ம் பாகம் | 17ம் | பக்கம் |
| | தன்வீருல் மிக்பாஸ் | | 187ம் | பக்கம் |

இது சம்பந்தமாக இன்னும் அனேகமான ஆதாரங்கள் எம்வசம் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி 4ம் வினாவிற்கு விடையைப் பார்ப்போம்.

கேள்வி 4 :- ஹிழிரு நபி + மூஸா நபி = யார் சிறந்தவர்கள்?

பிரசுரித்தவரின் பதிலின் சுருக்கம்:- இது ஒரு தேவையற்ற கேள்வி. குர்ஆன் ஹதீஸில் தெளிவில்லாதவர்கள் இதுபற்றிக் கிறுக்கித் தள்ளிவிட்டனர். ஹிழ்ரு நபி மூஸா நபியை விடச் சிறந்தவர் அல்ல. அதை வாதிக்கவும் முடியாது.

எமது பதில்:-

பிரசுரத்தின் நோக்கம் "ஹிழ்ரு நபி இன்னமும் வாழ்கிறாரா" என்பது. யாரும் எப்போதும் நபி மூஸா (அலை) அவர்களை விட நபி ஹிழிர் (அலை) அவர்கள் சிறந்தவர் எனவாதாடவில்லை. "நபி ஹிழிர் (அலை) அவர்கள் ஒரு முக்கியமற்றவர். அவருக்கு எந்தச் சிறப்பும் இல்லை; சிலர் கண்மண் தெரியாமல் அவர்களைப் போற்றிப் புகழ்கின்றனர். இதனை மட்டந்தட்ட வேண்டும்" என்பதே பிரசுரத்தின் நோக்கமாக இருக்கக் காண்கிறோம். இதற்காகவே இந்த ஒப்பு நோக்கல் இங்கு இடம் பெறுகிறது. குழப்பவாதம் புரியும் அனேக குருக்களின் குறிக்கோள்களும் உத்திகளும் இதுவே.

ஆனால் குருக்களின் பதிலில் கணித உத்தி கையாளப் பட்டுள்ளதால் அனேகமான தப்புக்கணக்குகளை நாம் காண்கிறோம். இரண்டு அலகுகளை சேர்த்து விடை எழுதும் போது, வினாக்குறி வருவது கணித முறையல்ல. "சமன்" என்ற= அடையாளம் விடையைத் தருமே தவிர, வினாவாகாது. ஆரம்ப வகுப்பு மாணவர்கள் கூட அழகாக இதனைப் புரிந்துள்ளனர்; தெளிவு பெற்றுள்ளனர். குருக்களுக்கு இது புரியாமல்போனது ஆச்சரியமல்ல. கேள்வியின்படி இதன் விடையைக் காண்போம்.

ஹிழ்ரு நபி + மூஸா நபி= ஹிழ்ரு மூஸா நபிகள்.

உதாரணம் :- (1) 5 + 2 = 7 (2) அடி + மூடன் = அடிமூடன்

முபாறக் + அப்துல் மஜீத் = முபாறக் அப்துல்மஜீத்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தும் கேள்வியின் நோக்கம் இவ்விரு நபிமார்களில் யார் சிறந்தவர் எனக்கேட்டு, இஸ்ரவேலர்களின் நபியாகிய மூஸா சிறந்தவர் எனக்காட்டி, தனக்கு வயிறு கழுவ உதவிவரும் ஸியோனிஸ எஜமானர்களுக்குத் தனது விசுவாசத்தைக் காட்டிக்கொள்வது.

ஸூிரத்துல் கஹ்புலே இஸ்ரவேலர்களுக்கு விரோதமாக வரும் வசனங்களில் திருத்தங்களைச் செய்திடப் பல கோடி ரூபாய்களைச் செலவிட பெருமானார் (ஸல்) அவர்கள் காலம் முதல் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. தோல்வி கண்டபின் இஸ்லாமியப் பெயரிலே இயங்கும் ஸியோனிஸ பாஸிஸ வஹ்ஹாபிய இயக்கங்களின் உதவியுடன் இதற்கென்றே உருவாக்கப்பட்ட குருமார்கள் மூலம் முயற்சிகள் நடைபெறுகின்றன. (பார்க்க - உலகப் புகழ்பெற்ற உளவுஸ்தாபனங்கள் அதன் செயல்பாடுகள்.) இருந்தும் நாம் இதைப் புரியவில்லை என்று அவர்கள் நம்பிக்கையுடன் இருக்கிறார்கள் என்று நினைப்போம். இவ்விரு நபிமார்களில் யார் சிறந்தவர் எனப் பகிரங்கப்படுத்த முனைகிறார் என்ற ஊகத்தின்பேரில், இவ்விருவரையும் ஒப்பு நோக்குவோம்.

**நபி ஹிழிர் (அலை)** அவர்கள் நுபுவத்தையும் விலாயத்தையும் பெற்ற அனேக நபிமார்களில் ஒருவர் விசேஷமாக இறைவனின் றஃமத்தையும் பிரத்தியேகமான அறிவையும் பெற்றவர்கள். நீண்ட வாழ்நாட்களைச் சிறப்பாகப் பெற்றவர்கள்.

**நபி மூஸா:-** நபி மூஸா (அலை) அவர்கள் நுபுவத்தையும் விலாயத்தையும் மேலதிகமாக தூதுவத்தையும் பெற்றவர்கள். "தவ்றாத்" என்ற வேதம் கொடுக்கப்பட்டவர்கள். இறைவனால் அனேகம் புகழப்பட்டவர்கள். கண்ணியமிக்கத் தூதுவரெனப் போற்றப்பட்டவர்கள். உலூல் அஸ்மிக்களில் ஒருவர். இறை தரிசனத்தை உலகிலே அனுபவித்தவர்கள். இறைவனோடு பேசியவர்கள்.

**யார் சிறந்தவர்?** நபி மூஸா (அலை) அவர்கள் மிக்கச் சிறப்புகள் வாய்ந்தவர்கள். நபி ஹிழ்ரு (அலை) அவர்கள் சிறப்புகள் பலவற்றைப் பெற்று இன்றுவரை வாழ்பவர்கள். நபிமார்கள் சிலர், மற்றும் சிலரைவிட மேன்மையானவர்கள்.

இனி கேள்வி - 5வது என்னவென அறிவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி-5:- ஹிழிரு நபி மரணித்து விட்டார்களா?

பிரசுரித்தவரின் பதிலின் சுருக்கம்:- ஒவ்வொரு ஆத்மாவும் மரணத்தை சுவைத்தே ஆகவேண்டும். (3:185) ஈஸா நபியை உயர்த்திக் கொண்டான் (4:158) ஹிழிர் நபி இன்னமும் இருக்கிறார் என்பதற்கு குர்ஆனில் ஆதாரம் இல்லை. "நபியே உமக்கு முன் எந்த மனிதருக்கும் நித்திய வாழ்வைக் கொடுக்கவில்லை ஆகவே நீர் மரித்தால் அவர்கள் மட்டும் வாழப் போகிறார்களா?" (21:34) ஹிழிர் நபி உயிரோடு இருக்கிறார் என்று மனிதர்கள் கூறுவதைப் பார்க்கும் போது வேதனைப் படாமல் இருக்க முடியவில்லை. இவ்வாறானவர்களை என்னவென்று அழைப்பது?

எமது பதில்:-

திருமறைக்கு குருக்கள் அவர்கள் கொண்ட கருத்தை பார்க்கும் போது நமக்கும் வேதனைப்படாமல் இருக்க முடியவில்லை. நபி ஹிழிரு(அலை) அவர்கள் உயிரோடு இல்லை என்பவர்களை என்னவென்று அழைப்பது? எம்மிருவருக்கும் கவலை ஒன்றுதான். ஆனால் கருத்துக்களில்தான் முரண்பாடு. "(நபியே) உங்களுக்கு முன் எந்த மனிதருக்கும் இவ்வுலகில் நித்தியவாழ்வைக் கொடுக்கவில்லை." (21;34) இந்த ஆயத்தில் சொல்லப்பட்ட 'நித்தியம்' அல்லது 'நிரந்தரம்' என்ற சொல் இறைவனுக்கு மட்டுமே உரியது. இறைவனின் சிறப்புத் தன்மை அது. அவனே நித்தியன், நிரந்தர ஜீவிதம் உடையவன். இக்கருத்தில் நாம் மட்டுமல்ல சகல முஸ்லீம்கள் - காபிர்கள் கூட முரண்படுவதில்லை. இத்திருமறை வசனத்திற்கும் நபி ஹிழிரு (அலை) அவர்கள் நீண்ட ஹயாத்தை உடையவர் என்பதற்கும் என்ன தொடர்பு?

நித்தியம் அல்லது நிரந்தரம் என்பதற்கும் நீண்ட ஆயுளுக்கும் ஒப்பிட முடியாத வித்தியாசமுண்டு. அல்லாஹ் நபி ஹிழிர் (அலை) அவர்களுக்கு மட்டுமல்ல, அவர்களுக்கு முன்பும் பின்பும் அனேகருக்கு நீண்ட வாழ்நாளைக் கொடுத்துள்ளான். அதனை இறைவனே கூறுகிறான். திருமறையில் 7;15 என்ற வசனத்தைப் பாருங்கள். இப்லீஸ் ல∴னத்துல்லாஹி இறைவனிடம் மறுமை வரை தனது வாழ்நாளை நீளமாக்குமாறு பிரார்த்தித்தான். சிறு திருத்தத்துடன் அதாவது "மறுமைவரையல்ல, முதலாவது சூர்ஊதும்வரை உமக்கு அவகாசம் தருகிறேன" என்று அவனது பிரார்த்தனையை அல்லாஹ் ஏற்கிறான். இதனைத் திரு மறையில் (அல்லாஹ்) "நிச்சயமாக நீ அவகாசம் கொடுக்கப்பட்டவர்களில் உள்ளவனாவாய்" (7:15) என்று கூறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவகாசம் கொடுக்கப்பட்டவர்கள் என்று கூறும்போது, இப்லீஸ் லஃனத்துல்லாஹ் மட்டுமல்ல, மற்றும் பலபேர் அதில் அடங்குவதாகப் பன்மையிலேயே இறைவன் கூறினான். இந்த அவகாசம் - நித்தியம் அல்லது நிரந்தரம் என்ற பொருளைத் தராது. அவசரமாக உயிர் பிரிக்கப்படாமல் "அவகாசமான ஒரு தவணை எல்லைவரை" என்ற கருத்தையே கொடுக்கும். திருமறையின் 21:34 ஆம் வசனம் 7:15 ஆம் வசனத்திற்கு இசைவானதேயன்றி முரண்படவில்லை- முரண்படவும் முடியாது. நிச்சயமாக முரண்படவும் கூடாது. அப்பேரறிஞனின் வாக்குகள் ஒருபோதுமே முரண்படமாட்டா. அவ்வாறெனில் அந்த அவகாசம் அளிக்கப்பட்டவர்கள் யார்? ஒன்றா? இரண்டா? ஓராயிரமா? பலபல கோடான கோடிப்பேர் இந்த அவகாசமளிக்கப்பட்டவர்களில் அடங் குவர். உதாரணத்திற்கு 10 பேர்களை மட்டும் கவனிப்போம்.

1. நபி இத்ரீஸ் (அலை) அவர்கள் தங்களது 365 ஆம் வயதில் விண்ணில் உயர்த்தப்பட்டவர்கள். 4ம் வானத்தில் ஹயாத்தாக இருக்கிறார்கள்.

2. நபி ஹிழிர் (அலை) அவர்கள் தஜ்ஜால் வெளிப்படும் வரை -நபி ஈஸா (அலை) இமாம் மஹ்தி (அலை) அவர்கள் வரும்வரை உயிருடன் இருப்பார்கள். தஜ்ஜாலால் வெட்டப்பட்டு, பின் உயிர்ப்பிக்கப்பட்டு தஜ்ஜாலைப் பொய்யனாக்குவார்கள்.

3. நபி இப்றாஹீம் (அலை) அவர்களின் காலத்திற்கு முன்னுள்ள அப்லாதூன் "தறாவந்" என்ற மலைப் பிரதேசத்திலே இன்றும் உயிருடன் வாழ்கிறார்கள்.

4. நபி இல்யாஸ் (அலை) அவர்கள் மலை வனாந்தரப் பிரதேசங்களில் இன்று வரை வாழ்கிறார்கள்.

5. நபி ஈஸா (அலை) அவர்கள் தங்களின் 33ஆம் வயதில் விண்ணில் உயர்த்தப்பட்டு இன்றும் உயிருடன் இருக்கின்றார்கள்.

6. அலிஇப்னு அபிதாலிபின் மகன் முகம்மதிப்னு ஹனபிய்யா (ரலி) அவர்கள் "ரஸ்வா" என்ற மலைப் பிரதேசத்திலே இன்றுவரை மறைந்து வாழ்கிறார்கள்.

7. சுவனத்தின் பேரரசி அன்னை பாத்திமா (ரலி) அவர்களது 12வது தலை முறையில் வந்த இமாம் மஹ்தி (அலை) அவர்கள் தமது விரோதிகளின் பயத்தினால் ஹிஜ்ரி 250ம் வருடம் முதல் மறைந்து வாழ்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. "காப்" மலைப்பிரதேசத்திலே தஜ்ஜால் ல.்.னத்துல்லாஹி கைகளிலே விலங்கிடப்பட்ட நிலையில் இன்றுவரை வாழ்கிறான்.

9. துருக்கியின் மலைகள் சூழ்ந்த பிரதேசம் ஒன்றிலே பாலைவனப் பகுதியில் ய.்.ஜூஜ், வம.்.ஜூஜ் கூட்டத்தினர் ஸ்கந்தர் துர்கர்னைன் அவர்களால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (18:98)

10. இப்லீஸ் ல.்.னத்துலாஹ் முதல் ஸூர் ஊதும்வரை ஹயாத்தாக நம்மிடையே இருக்கின்றான்.

இவ்வாறு சூர் ஊதப்படும் காலம் வரை வாழ்பவர்கள் நிரந்தரம் அல்லது நித்தியமானவர்களல்ல. ஏன் மலக்குகள், மலக்கல் மௌத் அவர்கள் கூட நித்தியமாய் இருக்க முடியாது. "சகல உயிர்களும் மரணத்தைச் சுவைத்தே ஆக வேண்டும்". (3;185) என்பதன் பொருள் இதுவே. "இறைவனைத் தவிர்த்து அனைத்தும் அழிந்தேபோகும்". திருமறை - நபிமொழிகளை நம்புவதில் நாம் மற்ற எவருக்குமே குறைந்தவர்களல்லர். சில திருமறை வசனங்களை வஹ்ஹாபிகளை விடச் சரியாகப் புரிந்து கொள்கிறோம்.

மேலும் ஒரு ஹதீஸைப் பார்ப்போம். "நபி இத்ரீஸ் (அலை) அவர்களும் நபி ஈஸா (அலை) அவர்களும் வானத்துக்கு உயர்த்தப்பட்டு ஹயாத்தாக இருப்பதுபோல நபி ஹிழிர் (அலை) அவர்களும் நபி இல்யாஸ் (அலை) அவர்களும் பூமியில் ஹயாத்தாக இருக்கின்றனர். இவர்களுக்கு இறைவனால் வழங்கப்பட்ட விசேஷ சலுகைகளும் கைமாறுகளுமே அவை"

ஸிறாஜ்ஜுல் முனீர் பாகம் 2: பக்கம் 49

ஹாஸியதுல் கல்யுபி பாகம்1 பக்கம் 374

புஸ்தானுல் ஆரிபீன் 52

தாரிகுல் கமீஸ் 1-121

ஹயாத்துல் ஹைவானுல் குப்ரா 1-235

இன்னும் பிக்ஹுடைய அனேக உலமாக்களின் தீர்ப்புக்கள் 'நபி ஹிழிர் (அலை) அவர்கள் திருமறை உயர்த்தப்படும் நாள்வரை ஹயாத்தாக இருப்பார்கள்' எனக்கூறியுள்ளார்கள். இன்னும் அனேக ஆதாரங்கள் இது தொடர்பாக எம்வசம் உள்ளன.

"நபி ஹிழிர் (அலை) அவர்கள் இறந்துவிட்டார்கள்" எனச்சாதிக்கும் இவர்கள், அவர்கள் எங்கே அடங்கப்பட்டார்கள் எனக்கூறுவார்களா? நபி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹிழிர் (அலை) அவர்கள் பெருமானாரைப் பல முறை சந்தித்துள்ளதாக அனேக ஆதாரங்கள் எம்வசம் உள்ளன. அது மட்டுமன்றி, அனேகமான வாலிமார்களை பல முறை அவர்களைக் கண்டுள்ளனர். எந்த ஒரு இறைநேசரும் நபி ஹிழிர் (அலை) அவர்களைப் பார்க்காமல் – கதைக்காமல் இல்லை. எல்லா இறை நேசர்களின் வரலாறுகளிலும் மிகவும் விளக்கமாக இவை எழுதப்பட்டுள்ளன. எனவே ஹிழிர் நபி (அலை) அவர்கள் மரணித்து விட்டார்கள் என்பது மிக்க அபத்தமானது என்பதை விளங்கிக் கொள்வோம்.

**கேள்வி:– "அய்னுல் ஹயாத்" அது என்ன அய்னுல் ஹயாத்?**

**பிரசுரத்தின் பதிலின் சுருக்கம்:–** அது ஒரு தண்ணீராம். துல்கர்னைன் காலத்தில் அவரும் ஹிழிர் நபியும் அந்நீரைப்பருக போட்டி போட்டனராம். ஹிழிர் அவர்களுக்குக் கிடைத்ததாம். அல்லாஹ் அவனது தூதுவர் எவருமே நமக்குச் சொல்ல வில்லை. இந்த உம்மத்துக்கள் கண்டது – – கேட்டது படித்தது எல்லாம் உண்மைதான் என்ற மாயை தான் காரணம்; அக்கதைகளை நாம் ஒதுக்கித் தள்ளிவிட வேண்டும் என்று கூறி 14 வது பக்கத்துடன் பிரசுரத்தை முடித்து விட்டார்.

**எமது பதில்:–**

"மஜ்மஅல் பஹ்றைன் கல்லின் அத்திவாரத்தில் ஓர் அருவி உண்டு. அதற்கு அய்னுல் ஹயாத் என்று பெயர். அதன் நீரைப் பெற்றுக் கொள்ளும் வஸ்தெல்லாம் நீளமான ஹயாத்தைப் பெற்றுக் கொள்ளும்" – ஹதீஸ்

ஸஹீஹுல் புஹாரி 3ம் பாகம் 97 ஆம் பக்கம்

"இஸ்கந்தர் துல்கர்னைன் சக்கரவர்த்தி முன்னுள்ள வேதத்தில் நூஹ் (அலை) அவர்களின் மகன் ஸாம் என்பவரின் சந்ததியில் ஒருவர் அய்னுல் ஹயாத் எனும் அருவியில் மாவுல்ஹயாத் எனும் நீர் அருந்துவார்"– (ஹதீஸ்) என அறிந்து இருந்தார்.

இமாம் நஸயி (ரஹ்) அவர்கள் – நூல் மதாரிக்.

துல்கர்னைன் அவர்களின் ஷெய்கு மூலம் ஆதம் (அலை) அவர்களின் மகன் ஷீது (அலை) அவர்களுக்கு இறுதி உபதேசம் ஒன்றைக் கடைசி 11 நாட்களில் செய்ததாக அறிந்து கொண்டார். அதில் பூமியின் அஸ்தகிரியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் இருளை உண்டாக்கி இருக்கிறான். அந்த இருள்பகுதியிலே "அய்னுல்ஹயாத்" என்னும் அருவி ஓடிக்கொண்டிருக்கிறது. ஸாமின் சந்ததியினின்றும் ஒருவர் அந்நீரை அருந்துவார். அவர் இறுதிநாள்வரை ஹயாத்தாக இருப்பார்"

தாரிகுல் கமீஸ் பாகம்1-114ம் பக்கம் பிஸாஉட்டம ஆலி 37ம் பக்கம்

இவ்விஷயங்களைத் தெரிந்து கொண்ட துல்கர்னைன் அவர்கள் தமது சிற்றன்னையின் மைந்தர் நபி ஹிழிர் (அலை) அவர்களையும் பெரும் படையையும் துணைக்கு அழைத்துக்கொண்டு சென்றார். வரலாறு மிக நீளமானது. சுருக்கமாகக் கூறுகிறோம். நபி ஹிழிர் (அலை) அந்நீர் ஓடையைத் தெரிந்து நீரருந்தினார். ஏற்கனவே இந்நீரை அப்லாதுன் அருந்திஉள்ளார்.

1- அல் இன்சானுல் காமில் 2ம் பாகம் 74- 75ம் பக்கங்கள்

2- ஷிப்ரதைத்தி 211ம் பக்கம்

3- புதூ ஹாத்துல் மக்கீய்யா 3-336ம் பக்கம்.(மேலும் பல ஆதாரங்கள் உள்ளன. வாசிப்பவர்கள் களைப்பு அடைவார்கள் என்பதால் சுருக்கிக் கொள்கிறோம்.)

**இனி மாவுல் ஹயாத்தைப்பற்றித் திருமறை என்ன கூறு கிறது?** நபி ஹிழிர் (அலை) அவர்களைச் சந்திக்க நபி மூஸா (அலை) அவர்கள் போக வேண்டிய இடம்பற்றிக் குறிப்பிட்ட இறைவன் உப்பிட்ட ஒரு மீனையும் கொண்டு செல்லுமாறு பணிக்கிறான். அந்நீர்பட்டு மீன் உயிர்பெறுமானால் அவ்விடத்திலே இருப்பவரிடம் (நபி ஹிழிரிடம்) அறிந்து கொள் என ஏவினான். மஜ்மஅல்பஹ்றைனின் அருவியில்தான் அய்னுல்ஹயாத்தென்ற நீரோடை உள்ளது. என்பதற்கு வேறு அத்தாட்சிகளும் வேண்டுமா?

இறைவன் படைப்பினங்களில் அனேகம் படிப்பினைகளை வைத்துள்ளான். ஒரு பழத்தை உண்டால் நோய் ஏற்படுகிறது இன்னொரு பழத்தைத் தின்றால் நோய் போய்விடுகிறது. ஒரு உணவு நோயை உண்டாக்கும் வேறொரு உணவு அந்த நோயைப் போக்கும். அதுபோல நஞ்சை உண்டால் மரணம் ஏற்படும். அய்னுல்ஹயாத் நீர் உயிரை நீடிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19-02-95 தினகரன் வார மஞ்சரியில் ஒரு செய்தி

## இளமைத் தோற்றத்திற்கு, காந்த சக்தியுடைய வடதுருவத் தண்ணீர்

**நரை, திரையை அகற்றி, தலைமுடியை இயற்கையாக வளரச் செய்கிறது.**

வடதுருவத்தின் முனைக் கோடியில் காந்த சக்தியினால் ஈர்க்கப்பட்டுள்ள தண்ணீருக்கு மருத்துவ குணநலன்கள் நிறைந்து காணப்படுவதாக மருத்துவ ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இந்த அபார சக்திமிகு நீருக்கு மருத்துவ உலகில் பெரும் வரவேற்பு இருந்து வருகின்றது நோய் நொடிகளைக் குணப்படுத்துகிறது. இளமைத் தோற்றத்தை வழங்குகின்றது. தலையில் ஏற்பட்டுள்ள வழுக்கை மொட்டை என்பவற்றை அகற்றி கேசத்தின் வளர்ச்சியை துரிதப்படுத்துகிறது. காந்த சக்தி சாதாரண தண்ணீரில் வியக்கத்தகு சக்தியை உருவாக்கிவருகின்றது என புளோரிடா கிரின் கேவ் ஸ்பிரிங்சில் அமைந்திருக்கும் அல்பேட்றோய் டேவிட்ஸ் ஆராய்ச்சிப் பரிசோதனை நிலையத்தின் நிருவாக இயக்குநரும் வைத்திய நிபுணருமான வோல்ட்டர் ரோன்ஸ் தெரிவிக்கின்றார். முதன்முதலில் இந்த காந்த சக்தி நீரை உள்ளங்கையில் ஊற்றி, தலையில் வழுக்கை விழுந்த இடத்தில் பூசிய பொழுது புதியதோர் உணர்வு ஏற்பட்டது. தினமும் இவ்வாறு பூசிவர சில தினங்களில் இயற்கையாகவே இளமைத் தோற்றத்திற்குரிய தலை முடி வளரத் தொடங்கியது. நரை திரை விழுந்த முடியின் நிறமும் மாற ஆரம்பித்ததாகத் தெரிவிக்கின்றனர். வடதுருவ காந்த சக்தி பொருந்திய நீருக்கு மனித உடம்பிற்கு மீண்டும் இளமைத் தோற்றத்தைக் கொடுக்கின்ற தன்மை உண்டு. பென்ஸில்வேனியா மருத்துவக் கல்லூரியும் காந்த சக்தி நீருக்கும் மனித உடலிலுள்ள செல்களுக்கும் முதுமையை அகற்றும் தன்மை உண்டு எனவும் தெரிவிக்கப்படுகின்றது. காலையில் இந்த வடதுருவ காந்த சக்தியுடைய நீரைப்பருகுவதால் அதிக சக்தியும் அதிக பசியுணர்வையும் ஏற்படுத்துகிறது. ஒன்று அல்லது இரண்டு டம்லர் தண்ணீர் சிறந்தது. ஆனால் அதிகமாக அருந்துவதும் அதிகம் பலனைக் கொடுக்கும்.

(நன்றி தினகரன் 19.02.1995)

இதில் ஏதும் ஆச்சரியம் உங்களுக்கு உண்டா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாக ஒரு செய்தி:-

ரிஜாலுல் கைபிகள் என்ற இறைநேசர்களின் ஒரு கூட்டம் உண்டு. அக்கூட்டத்தில் நபி ஆதம் (அலை) அவர்களின் தன்மையில் 300 பேர்களும் நபி மூஸா (அலை) அவர்களின் தன்மையில் 40 பேர்களும் நபி இப்றாஹீம் (அலை) அவர்களின் தன்மையில் 07 பேர்களும் ஜிப்ரீல் (அலை) அவர்களின் தன்மையில் 05 பேர்களும் மீக்காயில் (அலை) அவர்களின் தன்மையில் 03 பேர்களும் இஸ்றாபில் (அலை) அவர்களின் தன்மையில் ஒருவரும் அடங்கிய கூட்டம் ஒன்று இறுதி நாள் வரையும் இருந்து கொண்டிருக்கும். இவர்களின் தலைமைப் பதவியை நபி ஹிழிர் (அலை) அவர்கள் வகிப்பார்கள். இவர்கள் அனைவரும் இறந்து விடுவதைத்தான் குர்ஆன் உயர்த்தப்படுதல் எனக் கூறப்படும். இக்கூட்டத்தினரைச் சைய்கினை செய்துதான் (நாம் படைத்தவர்களில் நின்று ஒரு கூட்டம் ஹக்கைக் கொண்டே நேர்வழிகாட்டி அதைக் கொண்டே நீதம் செய்வர். (திருமறை–)

"எனது உம்மத்துக்களில் ஒரு கூட்டம் ஹக்கின் பேரில் தரிபட்டவர்களாக இருப்பார்கள். எவருடைய மோசடியும் அவர்களுக்குத் தீங்கை உண்டுபண்ணாது" - ஹதீஸ்

இதை விளங்கிக் கொள்ளாத சிலர் தாங்களே அக் கூட்டத்தினர் என்று கூறி கூச்சமில்லாது மேடைகளில் கூறித்திரிகின்றனர். எத்தனயோ வகையான குழப்பவாதிகள் தோன்றி குழப்பங்களைத் தூண்டிவிட்டு திருமறை – ஹதீஸ்களுக்கு தம் அறிவுக்கு எட்டிய கருத்தைக் கூறி சமுதாயத்தைப் பிளவுபடுத்துகிறைனர். வருகின்ற அனைவருமே தாமே சுன்னத்துவல் ஜமாஅத்தினர் என்கின்றனர். 73 கூட்டத்தினரும் தாங்களே ஜயம் பெற்றவர்கள் என்கின்றனர். இக்குழப்பங்களை எதிர்பார்த்துத்தான் ஏற்கனவே மார்க்கக்கல்வியின் அவசியம் வலியுறுத்தப்பட்டது. அக்கல்வியைப் புரிந்து கொண்டோர் எல்லாம் வேதனைகளிலிருந்தும் தப்பிக் கொள்வர். முஸ்லீம்களின் பலவீனங்களைப் புரிந்துகொண்டதால்தான் ருஷ்திகளும் தஸ்லீமாக்களும் இப்னுஸவாக்களும் பிறமதத்தவர்களால் தயார் செய்யப்படுகின்றனர். காலத்திற்குக் காலம் ஷரிஅத்திற்கும் இஸ்லாமியக் கொள்கைகளுக்கும் மாற்றமான பிரசுரங்கள், விவாத மேடைகள், மூளைச்சலவை செய்யும் நூல்கள், பேச்சுக்கள் வெளிவருகின்றன. இது எப்போதும் நிற்கப்போவதில்லை. அவர்களை இனங்கண்டு வளர்ச்சிகளை குறைக்கவாவது பாடுபடுவோம்.

இன்று இஸ்லாத்தை அழித்துவிடப் புதியதொருவழி முறை கையாளப் படுகிறது. ஆண்டு 11ல் 13ல் சிறப்புச்சித்தி பெறுகின்றவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகத்தில் சேர்பவர்கள் முன் கூறப்பட்ட வஹ்ஹாயிய ஸியோனிஸ; பாஸிஸ முகவர்களால் அணுகப்பட்டு மூளைச் சலவை செய்யப்படுகின்றனர். இதற்கு வசப்பட்ட இளம் மாணவர்கள் இப் போதனைகளால் ஈர்க்கப் படுகின்றனர். போதை பொருளுக்கு அடிமைப் பட்டவர்கள் போல உணர்ச்சி வசப்படுகின்றனர். இவ்வியக்கங்களில் உள்ள மூத்தவர்களோ "அஸிட்" அடிப்பதிலும். கத்திக் குத்து. கராட்டேச் சண்டை போன்ற. அடாவடித்தனங்களிலும் ஈடுபட்டு நீதிமன்றங்களில் ஏறியிறங்குகின்றனர்.

அறிய அறியத்தான் அறியாமைபுரியும்.இவ்வாறான அறியாமை மனிதனின் சிறப்புத்தன்மையைக் குறைத்து விடும். குறைந்த அறிவு குறைகளை மட்டுமே கண்டு கொள்ளும். மேலும் மேலும் அறிந்தோமானால் அறியாமை என்ற இருளில் இருந்து மீட்சி பெறுவோம். அறிவுகளுக் கெல்லாம் மூலகாரணமான பேறறிவாளனே! எங்கள் இதயங்களை அறிவாலும் ஞானத்தாலும் நிரப்பமாக்கிவை. எங்கள் சிந்தனைகளை விரிவாக்க உனது ஞானத்தாலும் வழிகாட்டலாலும் சிறப்புகள் பெற்ற பெருமானார் (ஸல்) அவர்கள் பொருட்டால் எம் பிராத்தனையை அங்கிகரரிப்பார்களாக.

ஆமீன் - வஸ்ஸலாம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்கள் மிருகவதை செய்வதில்லை

சமுதாயத்தின் தேவை கருதி
சமய உண்மைகளை சமுதாயத்தின் முன் வைக்கும்
ஒரு சமுதாய எழுத்தாளரின் மற்றொரு படைப்பு...

## "முஸ்லிம்கள் மிருகவதை செய்வதில்லை"

*சமய - விஞ்ஞான - சுகாதார அடிப்படையில்
ஆதாரங்களுடன் எழுதப்பட்ட புரட்சி நூல்!*

சமுதாய ரீதியில்
சமயத்திற்கு துணைபோகும் சிறந்த நூல்!!

வெகு விரைவில் வெளிவரவிருக்கிறது
எதிர்பாருங்கள்!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org